# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள். 12.05.2026

## முன்னிலை

## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். CP 3411/F/2025**

திரு.ப.மூர்த்தி, -- புகார்தாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
அரசுசார்புச் செயலாளர்,
வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித்துறை, -- பொது அதிகார அமைப்பு
தலைமைச்செயலகம்,
சென்னை-600 009.

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (12.05.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு.ப.மூர்த்தி, அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திரு.தி.மாரிமுத்து, பிரிவு அலுவலர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, தலைமைச் செயலகம், சென்னை-09 அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 19.05.2025 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், “Form-I, Form-II, Form-III ஆகிய படிவங்களில் பல்லடம் நகராட்சி ஆணையாளர் அவர்களால் வழங்கப்பட்டுள்ள அறிவிப்புகளுக்கு எதிராக மேற்கொண்ட சுந்தர்ராஜ் என்பவர், உயர்திரு முதன்மைச் செயலர் அவர்களிடம் மேல்முறையீட்டு செய்திருப்பின் மேல்முறையீடு செய்த நாள் குறித்த விவரத்தை நகலாகத் தருக” என்பன போன்ற தகவல்களை 4 இனங்களில் வழங்கக் கோரி பொதுத் தகவல் அலுவலர், அரசு முதன்மைச் செயலர் அலுவலகம்,

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, சென்னை-600 009 அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து தகவல்கள் வழங்காத காரணத்தால் மனுதாரர், 14.07.2025 நாளிட்ட பிரிவு 18(1)-ன் கீழ் புகார் மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். இப்புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 12.05.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்து கடித எண்.10626615/நவ4(நிபமா-2)/2025-1, நாள் 21.07.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு இனம் வாரியாக தகவல்கள் விரைவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அதன் நகலை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் தனக்கு பொது அதிகார அமைப்பால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அதனை தான் பெற்றுக்கொண்டதாகவும் ஆணையத்தின் முன் தெரிவித்தார்.

6. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் கோரிய தகவல்கள், அவருக்கு பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்ட தகவல்கள் ஆகியவற்றை ஆணையம் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு உரிய தகவல்கள் பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்டுள்ளதை ஆணையம் உறுதி செய்து ஏற்று ஆணையம் பொதுத் தகவல் அலுவலருக்கு கீழ்க்கண்ட உத்தரவினை பிறப்பிக்கின்றது.

- **மனுதாரரின் 19.05.2025 தேதியிட்ட தகவல் கோரும் மனுவிற்கு உரிய காலத்திற்குள் (30 தினங்களுக்குள்) தகவல்கள் வழங்காகததற்காக அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் (19.05.2025 தேதிய), வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, தலைமைச் செயலகம், சென்னை-9 அவர்கள் மீது ஏன் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1) மற்றும் 20(2)-ன் கீழ் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணையத்திற்கு 17.06.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 3411/F/2025</u>**

**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
அரசுசார்புச் செயலாளர்,
வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித்துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை-600 009.

**அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்(19.05.2025 தேதிய),**
**வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை,**
**தலைமைச் செயலகம்,**
**சென்னை-9.**

**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)**

**<u>மனுதாரர்</u>**

திரு.பி.மூர்த்தி,
1-88 தேவராயன்பாளையம்,
இச்சிப்பட்டி போஸ்ட்,
சோமனூர் வழி,
பல்லடம் தாலுகா,
திருப்பூர் மாவட்டம்-641 668.

**<u>நகல்</u>**
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-9.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.(For followup).

Copy to: File NS/PA-